10731
13054 pr

# திருவருள்

திருவருள் அரங்கம்

1950
அறக்கட்டளை நிலையம்.
14805
7.-6. 1968

## சிவராத்திரி சிறப்பிதழ் - 1971

திருவருள் அரங்க இலவச வெளியீடு. 3

உ

திருவருள் துணை

# சமர்ப்பணம்


திருநாமம் அஞ்செழுத்து செப்பி, தீவண்ணர் [illegible] திருக்கோயில் சூழ்ந்து மலர் பறித்திட்டு உண்டு, மந்திரமாவதென திருநீறணிந்து வையத்துள், வாழ்வாங்கும் வாழும் வாழ்க்கை நெறியாளர்களின் கருத்து இதழ்களால் தொடுக்கப்பட்ட அருளமுதத்திற்கு ' **திருவருள்** ' என்னும் திருநாமம் சூட்டி மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமுமாய் மாணிக்கமாய், கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக் கலைஞானந் தானேயாகிப் பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப் பிரளயத்துக்கப்பால் ஓர் அண்டமாகி எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி எழுஞ் சுடராகி நிற்கும் மலைமகள் மகிணன் மலரடியில் அல்லல் களைந்து அருள்வழி காட்டிச் சித்தத்தினுள் சிவலிங்கம் காட்டி அணுவிணுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க் கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி வேடமும் நீறும் விளங்க நிறுத்திக் கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி அஞ்சுகரத்தின் அரும்பொருள் தன்னை நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்துத் தத்துவ நிலையைத்தந்து எம்மையாள அவன்-அருளாலே அவன்றாள் வணங்க வரும் **மஹா சிவராத்திரி** நன்னாளில் அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**திருவருளாசிரியர்:— சு. ந. பரமசிவம்**

உ

கணபதி துணை

14805
1968



## விநாயகர் வணக்கம்

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாநந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமலிவுப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம் பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

**புலவர் சிவங் கருணாலய பாண்டியனார்**
இரத்மலானை,

14805

ௐ

# சிவன் வணக்கம்

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளானவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி!





## இத் திருவருளில் . . . .


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | சிந்தனைச் சுழலிலே | திருவருளாசிரியர் | 4 |
| 2. | வாழ்த்துரை வாணி | சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா | 6 |
| 3. | வாழ்த்துப்பாமாலை | அருட்கவி. சீ. விநாசித்தம்பி | 8 |
| 4. | திருவருள் | நா. முத்தையா | 9 |
| 5. | மஹாசிவராத்திரி மகிமை | கி. பி. ஹரன் | 10 |
| 6 | இல்லை அபாயம் உனக்கே | தே. கே. கிருஷ்ணபிள்ளை | 16 |
| 7. | சிந்தனைக்கு | அ. க சர்மா. B. Sc. | 17 |
| 8. | சிவராத்திரியின் மாண்பு | சி. வேலாயுதம் | 19 |
| 9. | திருவருள் சேருமா | செ தனபாலசிங்கன் | 23 |
| 10 | திருமுறையின் பெருமை | பி ஏ. எஸ் இராஜசேகரன் | 28 |
| 11. | சிவராத்திரி | பொன் அ. கனகசபை | 31 |
| 12. | சிவக் கங்குல் | பாண்டியனார் | 34 |
| 13. | குருவாய் வருவாய், அருள் வாய் குகனே | ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள் | 35 |
| 14. | தேர் வெண்பா | சீ. விநாசித்தம்பி புலவர் | 37 |
| 15. | விழிப்பு | காசி ஆனந்தன் | 39 |
| 16. | சிவராத்திரி | செ. ஸ்ரீக்கந்தராசா B. Sc | 40 |
| 17. | நன்றியுரை | திருவருளாசிரியர் | 41 |


இத் திருவருளில் உள்ள கட்டுரை, கவிதைகளின் கருத்துக்களுக்கு கருத்தாசிரியர்களே பொறுப்பாளிகளாவார்.

# சிந்தனைச் சுழலிலே

கடந்த
வருடங்களில்
காளையர்க்கு ஓர்
இரவு என சிறப்பாக
பேசப்படும் சிவராத்தி
ரியை சிறப்பிக்கும் பொரு
ட்டு சிவ சிந்தைக் கொண்ட
சிந்தனைக் காளையர்கள் ஒருங்குக்
கூடி **திருவருளரங்கமெனை** அமை
த்து சிவ சிந்தனைக் கருத்துக் கொண்-
ட கருத்து அமுதங்களுக்கு சிவராத்திரி
சிறப்பிதழ் என நாமம் சூட்டி எத்திக்கு
முள்ள சிவனருட் செல்வர்களுக்கு தித்திக்
கும் தேனமுதாய் தந்தார்கள். அதே சிவ
சிந்தைப் படைத்த இளைஞர்கள் தங்களின் மூன்
றாவது சிவராத்திரி சிறப்பிதழான எனக்கு அரச
னுக்கு மகுடம் சூட்டுவது போல் **திருவருள்** என்ற
சிறப்புப் பெயரை சூட்டி உங்கள் சுந்தரக்கரங்களில்
நின்று பந்தங் கொண்டாடி சிந்திசைக்க வைக்கின்றார்
கள் சிறப்பிதழான என் சிந்திசையை சைவப் பெருமக்
களாகிய நீவிர் பைந்தமிழ், செந்தமிழ் மொழியெனக் கொ
ண்டு தந்தை தாயுமாய் அந்தமிழ் இன்பத்தில் சந்ததமும் மூழ்கு
வீர்களென பரிபூரணமாக நம்புகின்றேன்.

கலைமகள் அம்சங்கள் நிறைந்த என்னைப் படைத்த படைப்பாளர்கள் சைவ கருத்துப் பெருமக்களாகிய உங்களுக்கு பெருமளவில் சிவ கருத்துக்களைக் கொண்ட அமுதத்தை அளிக்க வேண்டுமென்ற பேராவா கொண்டவர்கள் - திருமகளின் கடைக் கண் பார்வையால் இம்முறை சிறிதளவு அமுதத்தைத்தான் எத்திக்குமுள்ள உங்களுக்கு படைக்க முடிந்தது. அடுத்தமுறை திருவருளின் பெருமையால் மகிமையால் கருத்துரசக் கோவையாக என்னை வெளியிடுவார்களென்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை.

புல்லாகிப் பூடாய்ப், புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த நாம் செங்கமலப் பொற்பாதம் தந்து அருளும் சேவகனை அங்கணரசை அடியோங்காரமுதை நாங்கள் பெருமானை பாடி நலம் திகழ; அல்லல் களைந்து அருள் வழிகாட்டிச் சத்தத்தினுள் சதாசிவம் காட்டிச் சித்தத்தினுள் சிவலிங்கம் காட்டி அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பால்லய்க் கனுமுற்றி நின்ற கரும்புள்ளை காட்டி வேடமும் நீறும் விளங்க நிறுத்திக் கூடு மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி அஞ்சக்கரத்தின் அருள் பொருள் தன்னை நெஞ்சக்கருத்தின் நிலையறிவித்து தத்துவ நிலையைத் தந்து எமையாள அவனருளாலே அவன்தாள் வணங்க வரும் இச் சிவராத்திரி நன்னாளில் தொழுது தூமலர் தூவி துதித்து நின்று அழுது காமுற்று அரற்றி ஆக்கைக்கு இரைதேடி அலைந்து காக்கைக்கு இரையாகிக்கழியாமல் பூக்கைக் கொண்டவன் பொன்னடியை. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர், போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள் போற்றியெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம். போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள் எனப்போற்றி நாக்கைக் கொண்டு அரன் நாமத்தை 'நமச்சிவாய வாழ்க' நாதன்றாள் வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க! ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான்தாள் வாழ்க! ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க! என நவிழ்ந்து இம்மையிலே சோறும் கூறையும் அம்மையிலே சிவலோகமும் அடையப்பெறப் பிரார்த்திப்போமாக!

இம்முறை என்னைப் படைக்க பொருள் உதவி புரிந்த சைவப் பெருந்தகைகளுக்கு என் நன்றியைக் கூறிக் கொண்டு, மறுமுறை என்னை தித்திக்கும் திருவருள் அதமாய் மலர உதவி புரிந்தால் சிவ அமுதமாய் திருவருளால் வெளி வருவேன் எனக் கூறியவாறு விடைபெறுகின்றேன்.

**திருவருள்**

ஓம்

கொழும்பு, ஸ்ரீராமகிருஷ்ண மடத்து

**ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்**

அன்புடன் உவந்தளித்த

வாழ்த்துரை வாணி

---

ஓம் நம: ஶிவாய சாந்தாய
காரணத்ரய ஹேதவே !
நிவேதயாமி ச ஆத்மானம்
த்வம் கதி: பரமேச்வர !!

## வாழ்த்து

(தரவுகொச்சகக் கலிப்பா)

திருவருள் என்னுமோர் திருமலரைக் கொண்டிங்கு
திருவருள் அரங்கத்துத் திருவடியார் சித்திபெறத்
திருவருள் பாலிக்கும் திருச்சித்தி விநாயகனார்
திருவடி போற்றியென்றும் திருவருள்பெற் றுய்வீரே ! (1)

---

## (விருத்தம்)

பண்ணிலாப் பாட்டுப் போலே
பண்பிலா வாழ்வு போலே
கண்ணிலாக் காட்சி போலே
கருத்திலாப் பேச்சுப் போலே
தண்ணளிச் செல்வன் தாளைத்
தண்மலர் கொண்டு நாளும்
பண்ணிடாப் பூசை தானும்
பூசையோ பகர்வாய் நெஞ்சே ! (2)

இந்துவார் சடையான் தன்னை
ஈசனை எம்பி ரானைப்
புந்தியால் நினைந்தெஞ் ஞான்றும்
போற்றினால் வாழ்வுண் டாமே



மந்திபோல் திரிந்தி டாமல்
மனமேநீ யவன்பொற் றாளில்
பந்தித்துப் பணிந்து போற்றிப்
பரவினால் யான்வாழ் வேனே ! (3)

தண்டம்போல் அடிமேல் வீழ்ந்து
தலைதாழ்ந்து நீறு மிட்டுத்
தொண்டர்தம் தொண்ட ராகத்
தொண்டுக்கே ஆளு மாகி
வண்டுசூழ் குழலி பங்கன்
வடிவெழில் நினைந்தே ஏற்றித்
தொண்டனாய் வாழ்க நெஞ்சே !
தொல்லைதான் இல்லை தானே ! (4)

தொண்டரைச் சேர்ந்து நாளும்
தொண்டனாய்ப் பணிகள் செய்து
மண்டல மீதி லெங்கும்
மாண்புற வாழ்ந்தே என்றும்
தண்டலை யார்தம் பாத
தாமரை யமுத முண்டு
தொண்டருள் அரங்கந் தன்னில்
குறைவின்றி வாழ்வே னாக ! (5)

அன்புடன் பண்புங் கூட
அறிவுடன் ஒளியுங் கூட
இன்புடன் தொண்டு செய்து
இனியனாய் வாழ்வே னாக !
மின்னிகர் வாழ்வை நீக்கி
மெய்ம்மைசேர் சைவ னாகி
உன்பணி புரிவே னாக !
உம்பிரான் ! அருள்செய் வாயே !

— ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்.

ஓம்
சிவசக்தி

திருவருள் அரங்க அருளாசிரியர்
அளவையூர் சஞ்சீவி அருட்கவி
**சீ. விநாசித்தம்பி அவர்கள்**
மனமுவந்து வழங்கிய

## வாழ்த்துப்பாமாலை

ஆவியும் உடலும் சுற்ற அறிவொடு நலங்களெல்லாம்
மூவருமறியா நின்ற மூர்த்தியின் பதத்துக் காக்கி
நாவினில் நமச்சிவாய நன்மொழி நயந்தென்னுரும்
சீவருய்ந் தோங்கவைக்கும் **திருவருளரங்கம்** வாழி

ஆலயமேதுதெய்வ அருளொளி ஏது வேத
மூலங்க ளேதென் றிங்கு முரண்படுவோருக்கெல்லாம்
நூலுறு சாட்சிகாட்டி நுண்பொருள் விரித்துக்காட்டிச்
சீலமாய்த் தொண்டு செய்யும் **திருவருளரங்கம்** வாழி.

> உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப்புகழ்தல் விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலாகும்.—
>
> —**ஆறுமுக நாவலர்**



உ

# திருவருள்

**( நா. முத்தையா )**

திருவருளை முன்னிட்டு என்றும் திருவருட் சம்மதப்படி என்றும் திருவருளை முதலில் வைத்துப்பேசுவது பெரியோர்களுடைய மரபு. இறைவனும் திருவருளும் சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்றே. இறைவனைப் போலத் திருவருளும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

குருவருள் கூட்டும்போது திருவருள் சித்திக்கும். திருவருளைக் குரு என்றும் சக்தி என்றும் சொல்லுவர். ஜீவாத்மாவைப் பரமாத்மாவிடம் அழைத்துச் சென்று சேர்ப்பது திருவருட் சக்தியே. திருவருள் பெற்றவர்களை அவர் செய்யும் தவத்தாலும், அவரது குணத்தாலும், அவருக்குப் பிற உயிர்களிடத்துள்ள அருளினாலும், அவருக்குத் தம்மோடு தொடர்புடையாரிடத்து உள்ள அன்பினாலும் கேட்பவருடைய அஞ்ஞானம் என்கின்ற அந்தகாரம் அறுதற்குக் காரணமாகிய அவரது சொற்களாலும் உணரலாகும். இதனைப் பட்டினத்தடிகள் பின்வரும் பாடலால் விளக்குகின்றார்.

''பொருளுடையோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடையோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோ
லருளுடையோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சியேகம்பனே.''

தமக்குச் செல்வம் உள்ளபொழுது யாசிப்பவர்கட்குக் கொடுத்து வருவாராதால், பொருளுடையோரைச் செயலினும் என்றார். வள்ளுவர் பொருளைச் சேமிக்கும் வழி பசித்து வந்தவர்களுடைய பசியைத் தீர்த்தல் என்று கூறுகின்றார். வீரனுடைய செயலைப் போர்க்களத்தில் அறியலாம். கல்வித் தேர்ச்சி உடையவரை அவரது முகத்திலிருந்து அறியலாம். இறைவன் திருவருள் பெற்றவரையோ அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் அறியலாம்

உ

சிவமயம்

# மஹா சிவராத்திரி மகிமை

இ. பி. ஹான் *நிர்வாக ஆசிரியர் ஈழநாடு*

பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க வினாசக லிங்கம்
தத் பிரண மாமி சதா சிவ லிங்கம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிட தீவினைமாளும்
சிவ சிவ என்றிடல் தேவரும் ஆவர்
சிவ சிவ என்றிட சிவ கதி தானே!

ஒருநாள் ஒரு பொழுதாயினும் சிவன் நாமம் உச்சரித்திடல் வேண்டும். ஏன்? ஜன்மம் உடைத்தேற நாம் எடுத்த ஜென்மங்கள் கணக்கெழுதித் தொலையாது. அரஹரா என்று ஒரு வார்த்தை சொன்னாலும் போதாதோ? நாம் செய்த புண்ணியத்தின் பயனாக நமக்கு இந்த மானிடப் பிறவி கிடைத்திருக்கிறது. 'அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது' அரிதினும் அரிதாய் இந்தப்பிறவி எடுத்ததின் பயன் என்ன? அதை எப்படிப் பெறலாம்? என்பதைப்பற்றி சற்றே சிந்திக்க வேண்டாமா? சிந்தித்தால் அவன் அருளாலே நமக்கு வழி துலங்கும். பல அருளாளர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெற்று மானிடப் பிறவியின் பெரும் பயனை அடைய அவன் பெருங் கருணையினாலே பலப்பல பாடல்களாகவும், கதைகளாகவும் பாடியும் எழுதியும் வைத்திருக்கின்றார்கள்.

ஆக்கையால் பயனென் அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இல்வாழ்க்கையால் பயனென்? என்று இடித்துக் கூறி, ஆலயத்திற்கு சென்று புஷ்பங்களால் அருச்சனை செய்து இறைவனை போற்றி போற்றி என்று போற்றி வழிபடச் செய்ய வேண்டுமென்றும், இன்றேல் இந்த வாழ்க்கையால் பயனில்லை என்றும் கூறுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள் பெருந்தகை.

ஆனால் இன்றைய நிலையில் கோயிலுக்குச் செல்லவும் வழிபாடு செய்யவும் நம்மில் பலருக்கு நேரமேது? ''பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிலார், நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார் ஆக்கைக்கே இரைதேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழிக்கின்றோம் அந்தோ பாவம்! இறை வழிபாட்டினால் கிடைக்கும் பயனை, பெரும் பயன்தனை அறிந்தால் ஆக்கைக்கு இரைதேடி அலையவேண்டாம் இம்மையிலே சோறும் கூறையும் கிடைக்கும். அம்மையிலே சிவலோகமும் ஆளமுடியும் என்று உறுதி கூறுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப் பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள் என்று நமக்கு அறிவுறுத்துகின்றார் அவர். இறைவனைப் பாடிப் பரவினால் நமக்கு தேவையானவையெல்லாம் கிடைக்கும். வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கருணாமூர்த்தியாகிய நம் சிவபெருமான்.

சிவபெருமான் எங்கே இருக்கின்றார்? புறக்கண்ணுக்கு ஆலயங்களில் உள்ளார். அகக்கண்களுக்கு, நமக்குள்ளும், எல்லா உயிர்களுக்குள்ளும் மறைய நின்றுள்ளான் மாமணிச் சோதியான். நமக்குள்ளே கோயில் கொண்டுள்ள அந்த அருட்பெரும் சோதியைக் காண வேண்டுமாயின், உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய வேண்டுமாம். அப்படிச் செய்தால் அவர் நமக்கு முன் வந்து நிற்பார் என்கிறார் அப்பர் அடிகள். உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கி கடைவதெப்படி? புரியவில்லையே!

நமக்குள்ளே மட்டுமல்ல புறத்திலும் இறைவனை, நினைக்கவும், காணவும் நம் முயற்சியால் முடியாது. அவன் அருள் இருந்தால் தான் அவன் தாள் வணங்க முடியும். நான் என்ற அகந்தை நம்மிடம் சிறிதும் இருக்கும் வரை அவன் அருளுக்கு நாம் பாத்திரமாக முடியாது. வாழ்க்கையிலே பலப்பல துக்கங்களையும் அனுபவித்து '' என்னாலாவது ஒன்றுமில்லை, தெய்வமே எல்லாம் உன் செயல் '' என்ற நல்லறிவு உதயமாகிவிட்டால், அப்போது தான் இறைவனின் அருளைப் பெற நாம் தகுதியாகி நமது தீவினையெல்லாம் மறையவும், இறைவனையே நம்பி வாழ்ந்து, அவருடன் வயப்பட்டு பேரானந்த பெருவாழ்வு அடையவும் வழி காண்போம். கருணைக் கடலாகிய இறைவன் நமக்கு அருள் செய்ய அல்லும் பகலுமாக நமக்கு உள்ளும் புறமும் இருந்து காத்திருக்கின்றார். அதைப் பெற பெருந் தடையாக '' நான் எனது' என்ற அகங்காரமும் மமகாரமும் குறுக்கே நிற்கின்றனவே! ஆலய வழிபாடு, சிவதரிசனம், சிவார்ச்சனை, சிவநாமபாராயணம் சிவபூசை இவற்றையெல்லாம், நம் பெரியோர்கள் காட்டிய வழியில் நாம் செல்லச் செல்ல, நமது ஆணவம் தேய்ந்து தேய்ந்து சிவனருள் கிடைத்து உள்ளும் புறமும் சிவமயமாகக் கண்டு முடிவில் சிவானந்தத்தை பெறக் கூடியதாக இருக்கும். அதுவே கிடைத்தற்கரிய. இந்த மானிடப் பிறவியைப் பெற்றதின் பெரும் பயனாகும்.

பகலெல்லாம் ஆக்கைக்கு இரைதேடுவதிலேயே கழிக்கின்றோம். இரவெல்லாம் உறங்குவதிலும், அவச்செயல்களிலும் நம்மில் பலரும் செலவிடுகின்றோம். வாழ்விலே ஒருநாள் ஒரு இரவிலாவது நமக்கென வாழாமல், சிவபெருமானுக்காக ஒதுக்கி, சிவ வழிபாட்டிலேயே கழித்து அருள் வாழ்விற்கு நம்மை தகுதியாக்கிக் கொள்ளவே ''மஹா சிவ ராத்திரி'' ஏற்பட்டது. அந்தப் புனித நாளிலே சிவதீட்சை எடுத்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஒரு குரு மூலமாகப் பெற்று சைவத்தில் பிரவேசிக்க ஏற்றதாகும். தக்க குரு கிடைக்கவில்லையானால் தட்சிணாமூர்த்தியையே குருவாகக்கொள்ளலாமென்றும் அவரே நமக்கு உள்ளிருந்து உபதேசித்து வழிகாட்டுவாரென்றும் பெரியவர்கள் கூறியிருக்கின்றார்கள்.



சைவர்களாகப் பிறக்கக்கூடிய புண்ணியம் செய்தவர்களில் பெரும் பாலோரும் இன்று சிவதீட்சை எடுக்கவில்லை. ஐந்தெழுத்து மந்திரத்தை ஒருவர் ஏழு வயதிலேயே சிவதீட்சை எடுக்க வேண்டுமென்றும்; அப்படிச் செய்பவர்களே சைவத்தில் பிரவேசித்தவர்களாவர் என்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் நமக்கு அறுவுறுத்தி இருக்கின்றார்கள். நமது சைவ குரவர் நால்வரும் ஐந்தெழுத்து மந்திரத்தின் மகிமையை பதிகங்களாகவும், பாடல்களாகவும் பாடிவைத்துள்ளார்கள் நம்மில் பலருக்கு அப்பதிகங்களும் பாடல்களும் மனப்பாடம் இராகமாகவும் பாடுவோம். ஆனால் அப்பாடல்களில், கூறியபடி '' நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று நம்மில் எவ்வ்ளவு பேர் நம்பி வாழ்கிறார்கள்! ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' அம்மந்திரத்தை எவ்வளவு பேர் ஓதுகின்றோம்? மனம் சிவபெருமானை மறவாதிருக்க அவன் திருநாமம் ஐந்தெழுத்தையும் நாவில் கொள்ள வேண்டாமா? இன்றேல் இமைப்பொழுதும் எம் நெஞ்சில் அவன் நினைவு எப்படி மறவாதிருக்க முடியும். திருவாசகத்தை '' நமச்சிவாய '' என்று முதலில் அம் மந்திரத்தை வைத்து மணிவாசகனார் பாடியதின் நோக்கம் என்ன? நமது மனதிலே இந்த மந்திரம் அரைக் கணமும் நீங்காதிருக்க வேண்டுமென்றும், அதன் மூலமே இறைவனை மறவாமல், எல்லோரும் ஏத்தப் பணிந்து அவன் திருவடியை அடைய முடியும் என்றும் சிவபுராணத்தைப் பெருங்கருணையால் மணிவாசகப் பெருந்தகை பாடிவைத்துள்ளார்கள். சிவபுராணத்தைப் பாடும் நாம் சிவமந்திரத்தை வாழ்க்கைத் துணையாகப் பயன்படுத்த வேண்டாமா?

சுத்த உணவு சாப்பிடுவதில்லையே, அப்படி இருக்க தீட்சை எடுக்கலாமா? என்று நம்மில் பலர் பயப்படுகிறோம். அந்தப் பயமே தேவையில்லை. '' குலமிலராயினும் குலத்திற் கேற்றதோர் நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே '' இந்த ஐந்தெழுத்து மந்திரம் நம்மையும் எமது வாழ்க்கையையும் பரிசுத்தப்படுத்தக் கூடியது. நம்மிடம் என்ன கூடாத பழக்கங்கள் இருப்பினும் சரி அவற்றை

யெல்லாம் நீக்கி எம்மை பரிசுத்தப் படுத்த தாயினும் நல்ல தலைவரான சிவபெருமான் காத்திருக்கின்றார். அவரை நாம் அம் மந்திரம் மூலம் விடாமல் அழைத்துக் கொண்டே இருப்பின், இவன் நம்மை விடமாட்டான், நம்மையே நம்பி இருக்கின்றான் எனக் கண்டு நமக்கு அருள் செய்து நம்மைப் பரிசுத்தப்படுத்தி விடுவார் என்பது உறுதி.

நமது முயற்சியால் நம்மை திருத்திக் கொள்ள முடியாது. இலங்கை அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் பார்க்கும் அன்பர் ஒரு chain smoker. விடாமல் புகைத்துக் கொண்டே இருப்பார் அப் பழக்கத்தை விட வேண்டுமென்றும் அது எவ்வளவோ விதத்தில் தீங்கானதென்றும் உணர்ந்திருந்தார். அதை எப்படியாவது விட்டுவிட வேண்டுமென்று விரதமெடுத்தார். மிகக் கஷ்டப்பட்டு மூன்று நாட்கள் புகைப் பிடிக்கும் பழக்கத்தை நிறுத்தினார். நான்காம் நாள் ஒரு அன்பர் புகைப்பதை கண்ணுற்றதும் விரதமெல்லாம் மறந்துவிட்டது. அவரிடமே ஒரு சிகரெட்டை வாங்கிப் புகைத்தார் மீண்டும் அப்பழக்கம் அவரைப் பிடித்துக் கொண்டது. தமக்கு கீழ் நிலையில் வேலை செய்பவர்களிடமும் சிகரெட் வாங்கிப் புகைத்தார். அவரது சொந்த முயற்சியால் விட முடியாமலிருப்பதைக் கண்டு மனம் நொந்து வெட்கப்பட்டார். தமது முயற்சியால் எதுவும் நடைபெற முடியவில்லை என்பதை உணர்ந்து இறை அருளையே வேண்டினார் வேண்டத்தக்கதறிவோய் நீ. வேண்ட முழுதும் தருவோய் நீயாக இருக்கும் அவன் அருளாலேயே அந்தக் கூடாத பழக்கத்தை விட முடியுமென்பதை உணர்ந்து அவன் திருநாமத்தையே உச்சரிக்கலானார். மனமார வேண்டினார் அவனருளாலே அந்தப் பழக்கமும் இப்போது அடியோடு நீங்கி விட்டதென்றும் சமீபத்தின் முன் என்னிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இங்கு வந்துள்ள சில அமெரிக்க வாலிபர்களும் தாங்கள் பல வருடங்களாக மயக்க மருந்துக்கு அடிமை



யாக இருந்ததாகவும் இறை அருளாலே அந்த அடிமைத் தனம் நீங்கி சுத்த சைவ உணவையே உட்கொண்டு புது வாழ்வு வாழ்வதாகவும் பல கூட்டங்களில் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் சிவசின்னங்களாகிய விபூதி, உத்திராட்சம் அணிந்து சிவப் பொலிவுடன் விளங்கியது கருணைக் கடலாகிய எம்பெருமானின் அருட் கடாட்சமாகும். அதோடு காண்பதற்கரிய காட்சியுமாகும். எல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே என்றார் திருஞானசம்பந்த சுவாமிகள்.

சைவர்களாகப் பிறக்கும் பெரும் பேற்றினைப் பெற்ற நாம் சிவராத்திரி நன்னாளில், நாமும், நமது குழந்தைகளுக்கும் இந்த ஐந்தெழுத்து மந்திர உப தேசம் பெற வேண்டும். அப்போதே மேன்மை கொள் சைவநீதி நம்மிடையே பரவி, நமது எல்லா துயரங்களும் நீங்கி பெரு வாழ்வடைவோம். வருகிற மகா சிவராத்திரியன்று சைவ மக்களெல்லாம் அம் மந்திரத்தை குருமூலமாகவோ தட்சிணாமூர்த்தி மூலமாகவே எடுத்து உய்ய எல்லாம் வல்ல பரமேச்வரன் அருள் செய்ய பிரார்த்திப்போமாக.

சுபம்.

இறையுணர்வு பெருகப்பெருக உடம்பால் வாழும் வாழ்க்கை அலுத்துப் போகிறது வெறும் உடம்பு மட்டும் வளர்வதற்கு இறையுணர்வு தேவையில்லை. இரையுணர்வே போதும். பல்லாயிரம் ஆண்டுகளாக மனத்தை கோவிலாக்கி நினைவுகளில் தெய்வம் நிலைக்க வாழ்ந்தவர்கள் நிறைந்த சமயம் நம்முடையது.

—மணிவண்ணன்-

உ

# "இல்லை அபாயம் உனக்கே"

(கே. கே. கிருஷ்ணபிள்ளை)

இசை ஆசிரியர்—கொழும்பு இந்துக்கல்லூரி

இராகம்—பைரவி தாளம்—மிஸ்ர சாபு

### பல்லவி

தில்லைச் சபாபதியைத் தினமொருக்கால் நினைந்தால்
இல்லை அபாயம் உனக்கே நன்நெஞ்சமே (தில்லை)

### அனுபல்லவி

தொல்லைதரும் உலகில் தோன்றிய நாள்முதலாய்
வல்லைப்பட்டுப் பாழும் உடலை வளர்த்தனை (தில்லை)

### சரணம்

நானென்றும் நீயென்றும் நண்பர் இருப்பர்-கெட்டால்
ஏனென்று கேட்பதற்கு எவருமே வருகிலார்
ஆனந்தமாகவே அம்பலத் தாடல்செய்
அப்பன் பதமே உனக்குற்ற துணையாய் நிற்கும் (தில்லை)



# சிந்தனைக்கு...!!!

A. K. சர்மா B. Sc (Lond); Dip in Ed (cey)

மனிதன் வாழுகின்றான். சிந்தித்து செயலாற்றும் திறன் அவனிடம் அமைந்ததால், உயிரினங்களிலும் மேலானவன் ஆகி, இயற்கையை அடக்கியாளும் உயர்நிலையை அடைந்து விட்டான். நாம் ஏன் பிறந்தோம்? இந்த வினாவிற்கு விடையளிக்க விஞ்ஞானம் தவறிவிட்டது. இன்று எதற்கும் விஞ்ஞான விளக்கங்களை இளம் உள்ளங்கள் எதிர்பார்க்கின்றன. இயற்கை நியதிகள் யாவற்றிற்கும், விஞ்ஞானம் முழுமையாக விடையளிக்க முடியாது. சில வருடங்களுக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞானக் கருத்துக்கள், இன்று, தவறானவை என்பது, விஞ்ஞான உலகில் சாதாரண நிகழ்ச்சி. எனவே, அனைத்தையும், விஞ்ஞானம் விளக்க வல்லது என்ற கருத்து, தவறானதல்லவா

விஞ்ஞானமும். பிற. அறிவுத்துறைகளும், மனிதன் அறிவின் எல்லையுள் எழுந்தவை மனித அறிவு, எல்லையில் லாததா? எனவே, மனித அறிவில் புலப்படாதவை. விலக்கப் பட வேண்டுமா? இதனை வளரும் இளம் உள்ளங்கள் சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கை, நிகழ்ச்சிகளுக்கு, விளக்கம் கிடைக்காத போது அருள் கைவந்த சிவ நெறிச் செல்வர்கள் தம் அனுபவத்தால், அவற்றை விளக்கியபோது. அவற்றை ஏன் ஏற்றுக்கொள்ள இயலா! இரமணரும், இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும், அரவிந்தரும் நம்மிடையே வாழ்ந்த மாணிக்கங்களே. அவர்கள் மனித இனம் உய்ய, தம் அனுபவத்தை வெளியிட்டனர் அவர் தம் அருள் வாக்கு விஞ்ஞான விளக்கத்திற்கும் அப்பாற்பட்ட மெய்ஞான விளக்கம். அதனை ஏற்காவிடில் அவர்களுக்கு நட்டம் இல்லை. மனித சமுதாயத்திற்கே பெருநட்டம் ஆகும்.

இன்று எதற்கும் பறக்கும்நிலை மனிதன் இயந்திரமாக மாறிவிட்டான். மனிதன் மனிதனாக வேண்டும் பின் தேவனாக வேண்டும். இது விஞ்ஞானத்தால் இயலாத சாதனை, மெய்ஞானத்தால் மட்டுமே இது சாத்தியமாகும் மனம் ஒரு பொறியல்லவா; இந்தப் பொறியை மனிதன் இன்னமும் அடக்கியாள அறியவில்லை. இந்த " மனதின் " உள் அறிவின் அந்தத்தில் இறைவன் உளன் அந்த உள்ளத்தை இறைவன் வதியத்தக்கதாக ஆக்க விஞ்ஞானம் வகை செய்யாது சமயமும் மெய்ஞ்ஞானமுமே வகை செய்யும்.

பிறப்பு—இறப்பு—பிறப்பு........—என்ற வாழ்க்கை வட்டம், அறுபட்டு மீளவும் பிறக்கமுடியாத ஓர் உன்னத நிலை ஏற்பட வழியில்லையா? ......— ஏன் இல்லை. இதற்கு விஞ்ஞானம் பதிலளிக்காது. சமயம் தான் வகை செய்யும்.

நம்மிடையே வாழ்ந்த சிவநெறிச் செல்வர்கள், நாம் வாழ வெளியிட்ட கருத்துக்களை சிரமேற்கொண்டு வாழுவகையறிந்து எல்லையில்லா பேரானந்தத்தைப் பெற இந்த சிவராத்திரி நன்னாளிலே சிந்தித்து செயலாற்றுவோமாக!

---

மனிதனுடைய தேகம் ஒரு பானை—பானைக்குள் வேகும் அரிசியும் பருப்பும் தண்ணீரும் போன்றவை மனிதனுடைய மூளைகளும் இந்திரியங்களும். அடுப்பின் மேல் பானை கொதிக்கிறது. பானையைத் தொட்டால் சுடும்; சோற்றில் கை வைத்தால் கை வெந்து போகும் பானையிலும் சோற்றிலும் உள்ள சூடு உண்மையில் பானையுடையது மல்ல, சோற்றினுடையதுமல்ல. கீழே உள்ள அடுப்பின் நெருப்பே இவற்றின் சூடாகிறது. அவ்விதமே பிரம்மம் உயிர்களுக்குள்ளும் அசேதனப் பொருள்களுக்குள்ளும் அவற்றின் குண விசேஷங்களாக உருவெடுக்கிறது. மூளையும் புலன்களும் செய்யும் வேலை அனைத்தும் பிரமத்தின் வேலையே. அதுவின்றி அணுவும் அசையாது.

—பகவான் இராமகிருஷ்ணர்.



உ

சிவமயம்

# சிவராத்திரியின் மாண்பு

( ஆக்கம்: சைவப்புலவர். சி. வேலாயுதம் )
விவேகானந்த மகா வித்தியாலயம்

கரும்பெனச் சுவைதரு சிவன்ராத்திரி தனில்யாரும்
விரும்புமெய்த் திருவருள் அரங்கநல் இளைஞர்
விருப்பியன் புடனளிதிடு திருவருள் இதழை யேற்று
இரும்புவி இன்புடன் நற்பயன் கொள்கவே.

நாத்திகம் தலையெடுத்து நாகரீகம் தலைவிரித்து
கல்லிலும் செம்பிலும் காட்டிடு கடவுளெனப்
புல்லினும் நொய்யவார்த்தை புகன்றிடு மிந்தநாளில்
சொல்லினிற் தொடுத்தசிவ ராத்திரிவிப ரங்கேண்மின்.

சென்றன நாள்சில சிதைவன இளமைநலம்
நின்றது சாவென்று ஓர்ந்துருகிச் சிவராத்திரி
நன்றென அதையுணர்ந்து தில்லைமன்றினில் நடமிடு
பொன்றிகழ் பாதமதை நோற்றிடுவோ மின்றிராநாம்.

கொல்புலித் தோலாடையுடை தொல்லைமிகுசி வன்ராத்
திரியை
தொல்வினைப் பகைகளையுள்ளார் யாவருவிரும் பிநோற்றால்
எல்லிருள் காயுவெய்யோன் இயல்பெனயாவு நீங்கித்
தில்லையோர் பரவுசீர்த்திச் சிவனடிசேர்ந் துவாழ்வார்.

## வேறு

சிவவிரதம் பலவற்றுள் சிவன்பிரியமெ னச்சிறப்புறு
வதிவ்விரதம்
சிவபெருமான் நந்திக்கு நயப்புடனே நவின்ற பெருவிரதம்
சிவராத்திரி யால்மேன்மை பெறுமாசிமாத அமரபக்க
சதுர்த்தசியில்
சிவ ஒளியோங் கிஞானஒளி விடுசீர்பெறு சிவராத்திரி விரதம்.

திரயோத சித்திதியில் ஒருபொழுதுண் டொருபொழு துறங்கி
சதுர்தசி தன்னில் உபாசமிருந் துறக்கமது நீக்கி
நான்கு சாமமும் நலம்பெறு சிவார்ச்சனை புரிந்து
அமாவாசை நாளதில் விரதபாரணஞ் செய்குதல் நெறியே.

## வேறு

உலகெலாம் முடிந்திடு மொருபிரளயந் தன்னில்
உலகெலா மின்றிடெம் உத்தமி உமையவள்
வெண்பிறை முடித்தவேணி வித்தகன் தன்னைவேண்டி
விண்பெறு மிவ்விரதநோற் றேபலவரம் பெற்றுளன்றே.

முந்தொருநாட் பொழிந்தபெரு மழைநீரின் பிரளயத்தால்
பந்துருவாக மேவுமுலகது மாழ்குமெல்லை பன்றியாய்த்
தனதுகொம்பாற் றூக்கியேமுன் போலாக்கியுந் தியங்கமலந்
தன்னில்நான் முகற்தோற்றுவித் துப்பாற்கடற் பள்ளி
கொண்டான்.



சதுர்முகத் தேவனுங்கே சராசரந் தன்னையெல்லாம்
மதிநதி வேணியானை மதித்திடா மதியினோடு
படைத்திடு காலந்தன்னிற் புடைத்திடு செருக்கினுற்றும்
படைத்திடு மூலநந்தனைப் பார்த்திட எண்ணமுற்றான்.

ஆலமணி நீழலிலிருந் தறமுரைக்கு மருளெந்தை
சீலனவன் நற்பெருமை சிந்தனைசெயாத் தனதுஅன்ன
மேலிவர்ந்து தரணியெலாம் மேன்மையொடு திரியுமெல்லை
ஆலிலையிலுறு நெடியோனை பாற்கடலிற் கண்டான்.

எழுந்திடு மகத்தையாலே எவரென அறியாவேதன்
எழுந்திடுன் படுக்கைவிட்டு என்றனன் மென்மையோடு
எழுந்திடு வென்றுகூற எத்துணைவி ரநீரென்று
எழுந்தனர் போரைநாடி எந்தையதை தேர்கிலாமல்.

நெடியவன் கேழலாகி நீள்நில மகழ்ந்துங்காணான்
அடியினை முடியினைக் காண்பான் வேண்டியுந்தி
முளரியின் முளைத்த வேதன்முடி யதுகாணனுகி
உளமதுநிலை குலைந்தே அன்ன ஊர்திநின்றி ழிந்துலைந்தான்;

பேரிவர் இருவராகிப் பெருசமர் இளைத்தபோது
பாரினிற் திரிபுரம்பொடி படவுலைவு செய்தோன்
காரிருள் இரவுதன்னில் நேரிலாச் சோதியாகி
நேரல ரகந்தைநீக்க வந்தநாளின் நாளன்றோ.

## வேறு

இன்னொரு காலந்தன்னில் இறையவன் தேவியாங்கே
பன்னரு மறைகளாலும் போற்றுதற் கரியதான
திருவுடை யெந்தைதன் திரிநேத்திர மதனைமூட
பெருமிருள் உலகினோரைப் பேரிடர்விளைத் ததன்றே.

கருவினையுலைக் குமந்தக் காரிருள்நீங் கவென்றேசெந்
திருமருவுந் தொல்லைத் திருவிடைம ருதூரிற்பன்
னொருத் திரருமெந்தை பதமலர்வழி பாடாற்றி
பாருளோர் பலரும்போற்றப் பலவரம்பெற் றதின்றே.

## வேறு

வேட்டையை வேட்டவேடன் நள்ளிருட் சாமந்தன்னில்
காட்டினைக் கடக்குமெல்லை கண்டது வேங்கையொன்று
தாட்டுணை வருந்தவோடித் தருவினிலேறி நின்றே
நாட்டமதி மையாவண்ணம் நடுங்கியேயி ருந்தான்றிரா.

கண்துயி லகலுமாற்றாற் கிளர்ந்தெழு தருவின்
கண்பெறு வில்வதனைக் கன்விடாப்புலி யின்மாட்டே
நண்ணுறு மாறுவேடன் எண்ணிலாவ எவுதூர்த்துப்
பண்ணொடு பூசையாற்றி பக்தனேபோற் றுயின்விலனிரா.

கண்ணினை யிடந்துமப்பு கண்ணப்ப மரபுதித்தோன்
கண்ணிலான் விளவெறிந்த மாத்திரைக் கோலொக்கவே
விண்பெறுதரு வின்கீழ்விளங் குசிவலிங்க பூசையாற்றி
விண்ணவர் பரவுதெய்வ விமலனினருள் பெற்றுய்தான்.

## வேறு

சங்கநிதி பதுமநிதிக் கிறைவனுன பெருகுபேரனும்
சுவர்க்க லோகபதி இந்திரனும் இருசுடரும்
அழகுருவாம் மன்மதனும் நடுத்தவரு நடுவன்றானும்
குறுமுனிக்குத் தமிழுரைத்த குமரனுதோற் றதன்றேவிது.

## வேறு

அன்னமாய் விசும்பு பறந்து அயன்தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான்மறவேன்
முன்னம் மாலறியா ஒருவனே நாயேனை
நயந்தாளும் எந்தையே காலன்வரு
முன்னமே நீயெனை யாட்கொண் டருளாய்
காலனையு தைத்தகால காலனே.

———X———

திருச்சிற்றம்பலம்.



உ

# திருவருள் சேருமா?

— செ. தனபாலசிங்கம் —

ஒரு கதை நினைவுக்கு வருகிறது. பிரம்மாவும், விஷ்ணுவும், தந்தையும் மகனும் தானே! ஆனால் அவர்கள் இருவருமே தம்மில் யார் பெரியவர்கள் என்று தமக்குள்ளே வாதம் செய்கின்றார்கள். வாதம் முடிவதாக இல்லை. வாதத்துக்கு ஒரு முடிவு காணச் சிவபிரான் வருகின்றார். ஒரு போட்டியை ஏற்படுத்துகின்றார். போட்டியிலே யார் கைக்கு வெற்றி வருகின்றதோ அந்த ஆசாமி பெரியவர் என்று முடிவு கட்டுகிறார். இருவரும் ஒப்புக்கொள்கின்றார்கள். சிவபிரான் வானுற ஓங்கி வளரும் அழற்பிழம்பாக மாறுகின்றார். அந்த அழற்பிழம்பின் அடியை அல்லது முடியை எவர் முதலிலே கண்டு வருகின்றார்களோ அவரே பெரியவர் என்று போட்டியின் முடிவையும் சொல்லிவிடுகின்றார். அடியைத் தேடி விடலாம் என்று வராக வடிவிலே புறப்படுகின்றார் மகா விஷ்ணு. அன்ன உருவிலே முடி கண்டு விடலாம் என்று பறக்கிறார் பிரம்மா. இருவரும் சளைக்கவில்லை. போய்க்கொண்டே இருக்கின்றார்கள். ஈற்றில் இருவரினாலும் அடியையும் காண முடியவில்லை முடியையும் காண முடியவில்லை. தன் தோல்வியை நேர்மையாக ஒப்புக்கொள்கின்றார் மகா விஷ்ணு. பூலோகத்துக்கே அவர் திரும்பி வந்துவிடுகிறார். ஆனால் பிரம்மா ஏதோ தந்திரம்பண்ணி இறைவனை ஏமாற்றப்பார்க்கின்றார். அப்போது தாழம்பூ ஒன்று தலைகீழாக வருகிறதைப்பார்க்கின்றார் பிரம்மா. இது நல்ல தருணம் என்று நினைத்துக்கொண்டு தாழம்பூவைக் கேட்கிறார் "ஏ தாழம்பூவே, நீ, எங்கிருந்து வருகிறாய்?" இறைவன் முடியிலிருந்து வருகின்றேன். முடியி

பிருந்து நழுவி கற்பகோடி காலங்கள் ஆகிவிட்டன'' என்று விடைவருகிறது. அந்தத்தாழம்பூவைத்தான் இறைவன் முடியிலிருந்து எடுத்து வந்ததாகப் பொய்ச்சாட்சி சொல்லச் சொல்கிறார் பிரம்மா. இறைவனுக்கு உண்மை விளங்கிவிடுகிறது. சாபம் வருகிறது. பிரம்மாவே, நீ பூலோகத்தில் மனிதனாகப் பிறப்பாயாக; திடுக்கிடுகிறார் பிரம்மா. தாழம்பூவையும் சும்மாவிட்டு விடுவாரா இறைவன்? தன்னுடைய பூசைக்கே தாழம்பூ இனிமேல் உரியதன்று என்று விலக்கிவிடுகின்றார். அழல் உருவில் நின்ற இறைவன் மலை உருவில் மாறி மகா விஷ்ணுவுக்கு அடியையும் காட்டுகிறார், முடியையும் காட்டுகின்றார். பொங்கழல் உருவன் போதநாயகன் அண்ணாமலையாக மாறிவிடுகின்றார்.

இந்தக்கதை பழங்கதை, வெறுங்கதை அல்ல. ஒரு தத்துவ உண்மை அங்கே பொதிந்து கிடக்கிறது. மகாஇலக்குமியை மணமகளாகப்பெற்ற மகாவிஷ்ணுவின் ஐசுவரியத்தைப் பற்றி என்ன சொல்லமுடியும்? அது மட்டுமா? ஆய கலைகள் அறுபத்துநான்கினையும் உணர்விக்கும் என்னம்மை அல்லவா சரஸ்வதி; அவளையே மணமகளாகப் பெற்றவர் பிரம்மா. ஆக, அவருடைய கல்வி நலனைப் பற்றி நாம் கருதவும் முடியுமா? செல்வத்தினால் எதனையும் சாதித்து விடலாம் என்று செருக்கு உடையவர் செல்வந்தர். அறிவினால் அறிய முடியாதது எதுவுமே இல்லை என்று அகந்தை உடையவர்களாக இருப்பவர்கள் அறிஞர்கள். செல்வராலும் அறிஞராலும்; தத்தம் செல்வாக்கைப் பிரயோகித்து அறிய முடியாதவன் ஆண்டவன் என்ற பேருண்மையை இந்தக் கதை காட்டித்தரவில்லையா?

அப்படியானால், இறைவனை ஒருவருமே அறிய முடியாதா? செல்வர்க்கும் அறிஞர்க்கும் அறிய முடியாத இறைவன் காதலாகிக் கண்ணீர் மல்கும் அடியவர்களுக்கெல்லாம் எளியவனாகிவிடுகின்றான். மாணிக்கவாசகர் மதி அமைச்சராக இருந்தவர் இனிவரும் செயலைச் சிந்தித்து முன்னாலே நிகழ்ந்தவற்றின் அனுபவங்களை எண்ணிப்பார்த்து இனி எப்படி நடக்க வேண்டும் என்று திட்டவட்டமான முடிவுக்கு வந்து அரசனுக்கு ஆணித்தரமான அறிவுரைகளைக் கூறுபவர்கள் தானே அமைச்சர்கள் எனவே, மாணிக்கவாசக சுவாமிகளின் அறிவுத் திறனைப் பற்றிப்பேச நமக்கு அருகதையே இல்லை. அரசன் வீட்டுப்பிள்ளை மணிவாசகரின் செல்வத்தைப் பற்றியும் பேசுவானேன்? இறைவன் **திருவருளுக்கு** ஆளான பின்பு அவரே பாடுகின்றார்

''பித்த உலகர் பெருந்துறைப்பரப்பினுள்
மத்தக்களிறெனும் அவர்விடைப்பிழைத்தும்
கல்வி என்னும் பல கடற்பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலிற்பிழைத்தும்'' .........

கல்வி செல்வம் என்ற சிறப்புகளினால் வரும் பெருமிதம் மயக்கப்பித்து! அதனால் பித்த உலகம் என்று அவர் பாடுவது நியாயம் தானே! ஆகவே கல்விப் பற்றாக இருந்தாலென்ன செல்வப் பற்றாக இருந்தாலென்ன இரண்டு பற்றுக்களுமே போய்விடவேண்டும். பற்றெல்லாம் ஒழிந்த பின்பே இறைவன் திருவடி சேரலாம். பற்று இருக்கும் வரை பிறவியும் இருக்கத்தான் செய்யும். பிறவி ஒரு பெருங்கடல்- காரண காரியத் தொடர்பாகக்கரையின்றி வருதலின் அது பிறவிப் பெருங்கடல். பிறவியைப்போக்கி வீடு பெறுவது நமக்கு உரிய இலட்சியம். அதை அடைவதற்குப் பற்று அறுத்தலே வழி. அந்த வழியை அடைய இறைவனிடம் உள்ள அன்பே துணை. பிறவியாகிய கடலிலே அழுந்தித்தத்தளிக்கும் உயிர்கள் முத்தி என்னும் கரையை அடைய வேண்டும் அந்தக் கடலைக்கடக்க வேண்டுமானால் நமக்கு ஒரு தெப்பம் வேண்டும். இறைவனுடைய **திருவருளே** தெப்பமானால் அந்தப் பிறவிப்

பெருங்கடலை நீந்திவிடலாம். "அடியார்பால் இணையில் பவம் கிளர் கடல்கள் இகந்திட இருதாளின் புணையருள் அங்கணர்" என்று பெரிய புராணம் இதை நமக்குச் சொல்லித்தரும்

செல்வப் பற்றும் கல்விப் பற்றும் இருக்கும்வரை உடம்புப் பற்றும் இருந்து கொண்டுதான் இருக்கும். காரண காரியத் தொடர்பாக நடந்து வருகின்றது இந்த உலகம். கருமம் செய்துவிட்டுப் பலனுக்காக நாம் காத்துக்கொண்டிருக்கின்றோம். இறைவனே நமது கருமங்களுக்குப் பலனைத் தருபவன் என்பதை நாம் மறந்து விடுகின்றோம்.

இவறலும் இகலும் இன்றி யார்க்குமோர் வெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
சிவனை யாம் வெறுத்தல் குற்றம் சிறந்த நோன்பியற்றிடாதே
தவறு செய்தனமென் றெம்மை நோவதேதக்கதென்றார்.

(கந்தபுராணம்)

நாம் இறக்கும் போது எல்லாக்காரணங்களும் தத்தமக்குரிய காரியங்களை உண்டு பண்ணுவதை நிறுத்திவிட முடியுமா? நிறுத்திவிடும் என்பது யுக்திக்குப் பொருத்தமானதும் அன்று. அவைமறைவாக நின்று வேண்டியபோது உருத்தாங்கி வரும். ஆகவேதான் இந்த உலகத்திலே மறுபிறப்பு உண்டென்று சொல்கின்றோம். நல்வினை தீவினையாகிய இருவினைகளும் பிறவிக்குக் காரணமானவை. 'வினைப் போகமே ஒரு தேகம்கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டால் என்றுபட்டினத்தாரே பாடினர் வினை அழியும்போதுதான் தேகமும் ஒழியும். இருவினையின் விளைவாக வரும் உடம்பு வினை அற்றபோது இருப்பதற்கு நியாயமில்லை. காரணமாகிய வினை அற்ற போது காரியமாகிய உடம்பும் இல்லாதொழியும் 'ஏழையின் இரட்டை வினை ஆயதொர் உடற்சிறை இராமல் விடுவித்தருள் நியாயக் காரனும்' எனத்திருவகுப்பு பாடினால் 'பிறவி அற இச் சிறை விடுதலைப்பட்டது; விட்டது பாச வினைவிலங்கே' என்று கந்தரலங்காரம் இதைப்பாடும்.



உடலும் உயிரும் ஒன்றுடன் ஒன்று ஊடுருவிக் கலந்து நிற்பதால் அந்நிலையிலே நான் என்னும் இரகசியப் பொருள் என்ன என்பது எமக்குத் தெளிவாக விளங்குவதில்லை. உடலும் தானும் ஒன்றே என்று தப்பாக மனிதன் எண்ணுகின்றான் புலன் வழியில் அடையும் மகிழ்ச்சிக்கு முடிவு வெகு விரைவில் வந்து அடையும். திருப்தியைக்காணமுடியாத அந்த மகிழ்ச்சி ஈற்றில் துக்கத்திலே முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது உடலானது உடுக்கும் துணியைப் போன்றது. அத்துணி கிழிந்து நைந்து போனால் வேறொன்றினை உடுத்துக்கொள்வது போல உயிர் ஒருடல் அழிந்ததும் இன்னொன்றில் சென்று சேரும். மரணம் என்பது ஆன்மாவின் முடிவு ஆகாது மனிதன் செயல்கள் அத்தனையும் பிறப்புடன் வந்த சுபாவங்களின் பயனே. அந்தச் சுபாவகுணங்களை அறவே புறக்கணிக்க முடியாது அவற்றை நல் வழியில் செலுத்தினால் வருவது நன்மையாகும் ஆசை பல வேஷம் கொள்ளும்; மனிதனுடைய சத்துரு ஆசை அதை உள்ளே நுழைய விடாது மனம் என்ற இராசதானியைக் காக்க வேண்டும்.

கல்வி செல்வம் என்ற இரண்டும் நெறியல்லா நெறியிலே தள்ளி விடவும் கூடும். நாம் கொஞ்சம் கருத்தாகவே இருக்க வேண்டும். அரசன் வீட்டுப்பிள்ளையாகி மன்னனுக்கு மதி அமைச்சராகி வாழ்ந்த மணிவாசகரே அச்சோப்பதிகத்திலே ஒரு திருவாசகத்திலே **திருவருள்** சேர்வதற்கு வழி சொல்கின்றார். இதோ அந்தத் திருவாசகம்!

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே **திருவருளே** சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறார் பெறுவார் அச்சோவே

**திருவருள்** சேருமா? சேரும்! நெறியல்லா நெறி தன்னை நெறியாக நினையாது சிறு நெறிகள் சேராது வாழ்ந்தால் **திருவருள்** நலன் கிடைக்காமலா போகும்;

உ

# திருமுறையின் பெருமை

தமிழிசைமணி:- பி. ஏ. எஸ். இராஜசேகரன்

சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிர்ச்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில் பெறும் மான்மறை
செம்பொருள்
வாய்மை வைத்த சீர்திரு தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே

ஆறும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமானும் நாவுக்கரசரும் 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரும் இவர்களுக்கு முன்பு வாழ்ந்த மாணிக்கவாசகரும் ஆகிய நால்வர் பெருமக்களுக்கும் தோன்றவில்லையானால், 1500 ஆண்டுகளுக்கு முன்னரே சைவசமயம் மறைந்திருக்கும். பெருமக்கள் நால்வரும் நம்முடைய சைவ சமயத்து வழிகாட்டிய பெருமக்களாவர். இவர்கள் காட்டிய வழியானது சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கமாகும் என்று நான்கு வழிகளை நமக்கு அறிவுறுத்தினாலும் நான்கு மார்க்கங்களும் எல்லாம் வல்ல பரமபதியாகிய சிவனுடைய திருவடியையே சேரும் பௌத்தம், சமணம் தமிழகத்தை ஆட்கொண்ட காலத்தில் பெருமக்கள் நால்வரும் தோன்றியமையால் மீண்டும் தமிழகத்தில் சைவம் அழியா நிலைப்பெற்றது. நாடு சிறப்புற்று ஓங்கியது.

இனி அவர்களுடைய பாடல்களிலே இரண்டொரு பாடல்களை ஆராய்வோம். திருமைலாப்பூரிலே வாழ்ந்த சிவனேசசெட்டியாருடைய ஒரே புதல்வியான பூம்பாவை இறந்துபட அவளுடைய அஸ்தியை குடத்திலிட்டு வைத்தார்கள் ஞானசம்பந்தப்பெருமான் மைலைக்கு வந்தபோது, பூம்பாவையின் நிலையைக் கூறக்கேட்டு, அக்குடத்தை ஆலயத்தினுள் வைக்கப்பணித்து 'மட்டிட்டபின்னை' என்ற தேவாரப்



பதிகம்பாடி, "தைப்பூசப் பெருநாளும், பங்குனி உத்தரப் பெருவிழாவும் ஐப்பசி ஓணவிழாவும் காணாது போதியே பூம்பாவை" என்று ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாடலில் வைத்துப்பாட குடத்திலிருந்த எலும்பு பெண்ணாகி வடிவம் கொண்டு உயிர் பெற்றமை சிறந்ததொரு அற்புதமாகும்.

நாவுக்கரசருக்கு அமுது படைக்க, அப்பூதி அடிகளுடைய மூத்த திருநாவுக்கரசு வாழைஇலை பறிக்கச் சென்றபோது அரவம் தீண்டி உயிர் துறக்க, அதை அப்பூதி அடிகள் மறைத்து அமுது படைக்கும் தருணத்தில் அப்பர் அறிந்து, மூத்த திருநாவுக்கரசின் உடலை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் பணித்து ஒன்றுகொலாம்! என்ற பதிகத்தைப் பாடி உயிர்பெறச் செய்தமையும் அற்புதமாகும்.

சுந்தரர் அவிநாசி என்னும் தலத்திலே வீதி வழியே செல்லும்போது ஒரு வீட்டில் அழுகை ஒலியும் எதிர் வீட்டில் மங்கள ஒலியும் ஒலிக்க, சுந்தரர் விசாரித்தபோது, இருபாலர்களும் இளவயதில் நீராடச் சென்றபோது, ஒருவனை முதலை விழுங்கிவிட்டதாகவும், மற்றச் சிறுவனுக்கு முப்பூரி நூல் திருமணம் பூநூல் கல்யாணம் இன்று நடைபெறுவதாகவும், அதனால் இங்கு அழுகையும், அங்கு மங்கள ஒலியும் கேட்கிறதென அறிந்து, சுந்தரர் முதலை விழுங்கிய குளத்திற்குச்செல்ல அங்கு தண்ணீரில்லாமல் இருந்தது. "எற்றான் மறக்கேன்" என்ற பதிகம்பாடி, குளத்தில் நீரை வரவழைத்து முதலையை வரச்செய்து, முதலை வாயிலிருந்து இறந்தபிள்ளையை வளர்ந்த நிலையில் அப்பாலகனை வெளியே கொண்டுவந்து விடும்படியான அற்புதம் நிகழ்ந்ததையும் நாம் அறிவோம்.

மூவரும் இறந்து போனவர்களை உயிர்பெற்று எழச்செய்து அற்புதத்தை நிகழ்த்தியுள்ளனர். இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் செய்துள்ளனர். இத்துணை சிறப்பு வாய்ந்த நால்வர் பெருமக்களின் பாடலை தினமும் பாராயணம் செய்தால் எல்லா நலன்களையும் இனிது பெறலாம் என்பதில் யாதொரு ஐயமில்லை.

இனி இத்திருமுறைகளை தினமும் பாராயணம் செய்தால் இம்மையில் என்ன நலன்கள் கிடைக்கும் என்பதையும் மறுமையில் எப்பதவி கிடைக்கும் என்பதையும் மூவரும் தமது பாடலில் குறிப்பிட்டுள்ளனர். என்னென்ன பலன் கிடைக்க என்னென்ன பாடல்கள் பாராயணம் செய்ய வேண்டுமென்பதை நோக்குவோம்

நமக்கு பொன் வேண்டுமானால் 'இடரினும் தளரினும்' என்ற பதிகத்தைப் பாராயணம் செய்யவேண்டும். சுரம், வெப்புநோய் முதலானது நீங்க வேண்டுமானால் மந்திரமாவது நீறு என்ற பதிகத்தைப் பாராயணம் செய்யவேண்டும். 'தம்மையே புகழ்ந்து' பதிகம் பாராயணம் செய்தால், நவக்கிரகோள்களால் வரும் இடர்கள் நீங்கும். 'சடையாய் எனுமால்' என்ற பதிகத்தை கன்னிப்பெண்கள் பாராயணம் செய்துவர திருமணம் கூடும். எதிர்பாராத விதத்தில் தீ விபத்து நேர்ந்தால், தமது பொருள்களுக்கு எவ்வித ஆபத்து வராமலிருக்க, 'போகமார்த்த பூண்முலையாள்' பதிகத்தை பாராயணம் செய்யவேண்டும் 'மறையுடையாய்' என்ற பதிகம்பாட உத்தியோகம் கிடைக்கும் பொருள் காணாமற் போனால் 'மீளா அடிமை' பதிகம்பாட அது உடன் கிடைக்கும். விருக்கில் பெருகும் இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் மேலே கூறியவற்றில் அடியவனுக்கு இம்மையில் கிடைத்த அனுபவங்களே என்பது உண்மை, உண்மை.

இவ்வளவு அற்புதமும் பெருமையும் நிறைந்தது நமது திருமுறைப் பாடல்களாகும் நான்கு பெருமக்களும் நால்வகை நெறிகளை காட்டியுள்ளதை ஏற்கனவே கூறினோம். உலகத்தில் ஒருவன் முறைப்படி நடக்கவில்லையென்றால் அவனிடம் "நாலு பேர் சென்ற வழியே நீயும் சென்றால் நல்லது கிடைக்கும். நீயாக புது வழி உண்டாக்கி கஷ்டப்பட வேண்டாமென்று பெரியோர்கள் கூறுவார்கள் அங்ஙனம் சிறந்த வழிகாட்டிய பெருமக்கள் நால்வரும் சரியை, கிரியா யோக, ஞான பாதங்களை விளக்கி அருளியுள்ளார்கள். அவர்கள் சென்ற வழியே நாமும் சென்று இம்மையில் வேண்டிய நலன்களையும், மறுமைக்கு வேண்டிய நலன்களையும் பெற்று சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வோமாக!

**சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக!**

வாழ்க! வளர்க!



உ

# சிவராத்திரி

( வித்துவான்— பொன். அ. கனகசபை )

சமயம் என்பது மண்ணில் நல்லவண்ணம் வாழும் வாழ்க்கை நெறியேயாகும். சமயவாழ்வு மனிதனைத் தெய்வமாக்கும் சஞ்சீவி; துன்பசாகரத்துட்பட்டோர்க்கு இன்பக் கரையைக் காட்டுந் திசையறிகருவி; பசியும் பிணியும் பகையுமின்றி மாந்தரை வாழவைக்கும் மாமருந்துமாகிடப் பிறவியின் பயன் சமயவாழ்வாகவே நம்முன்னோர் கண்டனர் தாம்பெற்ற மாறிலா இன்பத்தை நாமும் பெறுமாறு சமயவாழ்வை வகுத்துத் தந்தார்கள் அவர்கள் விரதங்களால் ஊனினை உருக்கி உள்ளொளி பெற்றார்கள். நாமும் ஞான ஒளியினைப் பெறுவதற்கு உதவியாவன விரதங்களே. விரதங்களுள்ளும் சிவ விரதங்களே சிறந்தவை. அச்சில விரதங்களுள்ளும் இராச விரதமாக விளங்குவது **மகா சிவராத்திரி** விரதமாகும்.

தெய்வந் தெளிந்து தெளிந்தோர்ப் போற்றிய முன்னோர், தெய்வத்தைச் சோதிவடிவாகக் கண்டு தொழுதார்கள். 'சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே" எனத் துதித்தார்கள். வெள்ளித் தீயிலும், விளக்குச் சுடரிலும் இயற்கையாக ஒளிப்பிழம்பைக் கண்டு வணங்கினார்கள் இவ்வொளிப் பிழம்பையே செயற்கையாக—சிவலிங்கமாக அமைத்து வழிபட்டார்கள் தேவரும், அசுரரும், முனிவரும், மனிதரும், பிறரும் இலிங்க வழிபாடு ஆற்றினர். சிவலிங்க வழிபாடாற்றும் விரதர்களுக்குச் சிவபெருமான் இலிங்கத்திலிருந்தே வெளிப்பட்டு அருள்புரிவார். இவ்வரலாற்றினைப் புராணங்களிற் பரக்கக் காணலாம்.

ஒரு நித்திய கற்பத்தின் பின் பிரமதேவனும் திருமாலும் தாமேபிரமம் எனத் தருக்கிச் சொற்போர் முற்றி மற்

போரிட்டனர்; உலகந் துன்புற்றது. உலகை காக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அவர் முன்னே நீண்டதோர் அனற் பிழம்பாய்த் தோன்றியருளினர். அவ்விருவரும் அவ்வனற் பிழம்பின் அடிமுடியறியப் பன்றியாயும் அன்னமாயும் புறப் பட்டனர். ஈற்றில் இருவரும் இளைத்து, முன்நின்ற இடத்திற்கு மீண்டனர்; செருக்கொழிந்து சிவசோதியைத் துதித்தனர் சிவபெருமான் அச்சோதியிலிருந்து வெளிப்பட்டு அவர்களுக்கு அருள் புரிந்தார். இதனைக் கச்சியப்பசிவாசாரியார்,

"மைக்கனமு மான்மழுவும் வரதமுடன் அபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே அருள்புரிந்தான்".

எனப் போற்றுகின்றனர்.

இவ்வாறு சோதிவடிவாய்த் தோன்றியதே இலிங்க மூர்த்தம் என்றும், அதிலிருந்தும் வெளிப்பட்டுத் தோன்றியருளிய வடிவமே இலிங்கோற்பவ மூர்த்தம் என்றுஞ் சொல்லப்படும். இலிங்கோற்பவ மூர்த்தம் சிவாலயங்களில் கர்ப்பக்கிருகத்தின் பின்பக்க வெளிப்புறத்திலே காணப்படும். இம்மூர்த்தம் இலிங்கத்திலிருந்து சிவன் வெளிவரும் பாவனையைக் காட்டும். அடியும் முடியும் மறைந்திருக்கும். அடியில் பன்றியும் முடியில் அன்னமும் முறையே அடிமுடி தேடுவது போல அமைந்திருக்கும். இலிங்கோற்பவர் தோன்றிப் பிரம விட்டுணுக்களுக்கு அருள் புரிந்த இராத்திரியே **சிவராத்திரி** எனப்படும்.

மாதந்தோறும் அபரபக்கத்துச் சதுர்த்தசி இரவு **சிவராத்திரி**யாகும். மாதந்தோறும் வருஞ் சிவராத்திரியிலும் மாசிமாதத்தில் வருஞ் சிவராத்திரியே **மகாசிவராத்திரியாகக்** கொண்டாடப்படுகின்றது. இதுவே சிவபெருமான் இலிங்கத் திருமேனியுடன் தோன்றிய காலம். இம்மகா சிவராத்திரி சிவபெருமான் ஒளிமயமான திருமேனியை உடையவர் என்பதையும், ஞானமே வடிவினர் என்பதையுங் காட்டுகின்றது.



அன்றியும் உள்ளும் புறமும் ஒளியான திருமேனியுடையவராகச் சிவன் நிற்பதையும் உணர்த்துகின்றது.

சிவராத்திரி இரவு பதின்மூன்றே முக்கால் நாழிகைக்குப்பின் மூன்றே முக்கால் நாழிகை நேரமே இலிங்கோற்பவ காலம் என்று போற்றப்படும். சிவராத்திரி உபவாசம், நித்திரை விழிப்பு என்பவற்றோடு கூடிய விரதமாகும். சிவபூசைசெய்வோர் இரவு நான்கு சாமமுஞ் சிவலிங்கபூசை செய்வர் ஏனையோர் சிவாலயங்களிற் சிவலிங்க தரிசனம் செய்து ஊண் உறக்கமின்றியிருப்பர். இயலாதவர் முதல் இரண்டு சாமங்களிலேனும் அவ்வாறு செய்வர். அதுவும் இயலாதவர் இலிங்கோற்பவ காலமாகிய இரண்டாம் சாமத்தில் மட்டுமேனும் அவ்வாறு செய்வர் நான்கு சாமங்களிலும் இரண்டாஞ் சாமமே மிகவுஞ் சிறந்தது.

நியமப்படி விரதமிருந்து நித்திரை விழிப்போர் விரும்பிய பேற்றைப் பெறுவர். அவர் நினைத்த காரியஞ் சித்தியாகும். இருக்குங் காலத்தில் பூரண ஆயுளும், நிறைந்த செல்வமும், பரந்த புகழும் உண்டாகும். இறக்குங் காலத்தில் மோட்ச இன்பமும் பெறுவர் இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்து நாமும் இம்மை மறுமை இன்பங்களை எய்துவோமாக.

---

இளைஞர்களுக்குப் பொது வேலைகளில் அதிகமான பழக்கமும் அனுபவமும் இல்லாத போதிலும் எதையும் நிறைவேற்றவும் ஈடுசெய்யவும் அவர்களிடம் ஊக்கமும் உற்சாகமும் இருக்கிறது. இதனால் அவர்களால் எதையும் சாதித்துவிட முடியும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை.—

ஓம்

திருச்சிற்றம்பலம்



# சிவக் கங்குல்

( எழு சீரடியா சிரிய விருத்தம் )

—புலவர்: பாண்டியனார்—

மன்னுயி ரெல்லாம் வினை செயுங் களைப்பு

மாற்றுதற் பொருட்டவை யொருங்கு

துன்னுறு மிருளிற் றூங்குவித் தொடுக்கித்

துணைவியே காணக்கூத் தயர்ந்து

பின்னு முன் போல் அவள் கருக்கொள முயங்கும்

பெற்றியாற் சிவனுக்கே யுரிய

தென்னுமவ் விரவிற் சிவன் திரு வருளை

யிறைஞ்சுவார் இடரின்றி வாழ்வார.



## " குருவாய் வருவாய் அருள்வாய் குகனே !"

அருளொளி நிலையம் போஷகர்:-ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள்

இன்பமாய திடையரு தோங்கவும்
துன்பமாயது தூரத்தில் நீங்கவும்
முன்பராபரன் மொய்குழலோ டணைந்து
அன்பின் ஈன்ற ஆணையைப் போற்றுவாம்.

ஒன்றாகிய சோதியினின்றும் பலவாகப் பிரிந்து ஆண், பெண் என நிலவும் எமதருமைச் சகோதர சகோதரிகளே! நீங்கள் அரிய குரு திருவருளைப் பெற்று மெய்நெறியைப் பற்றி அருட்பெருஞ் சோதியின் திருக்குமாரர்களாயும், திருக்குமாரிகளாகவும் திகழுங்கள் என்று வாழ்த்துகிறேன் அதுவே ஆன் அந்தமாகும்—இறவாப் பிறவா நெறியாகும்."

நீங்கள் உங்கள் உள்ளங்களைப் புனிதப்படுத்தி மாசற்ற கொள்கை மனத்தில் படிந்தவர்களாய் உங்கள் உங்கள் சமயங்களிலேயே அருட்பெருஞ் சோதியாம் இறைவனைக் காணும் பாக்கியம் எய்த பாடுபடுவீர்களாக!

" அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு " என்றார் தேவர்

ஆதிபகவன் உலகிற்கு மாத்திரமல்ல உடலுக்கும் முதன்மையானதே! அண்டத்தைப் போன்றதே பிண்டமும், அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவனைத் தொழும் தொண்டர்கள் நாங்கள். நாமனைவரும் ஆதியும் சோதியுமாக—மண்ணும் விண்ணுமாக —ஆவாளும் ஏவாளுமாக — ஆன்மாவும் மனமுமாக அம்மை அப்பரின் பாகங்களாய் பிறந்திருக்கும் தெய்வப் பிணங்களாய் நிலவுகிறோம். வறட்டு வாய் வேதாந்தம் பேசி உலகை ஏமாற்றித் திரிந்து ஈற்றில் மரணத்தையே அடைகிறோம். இதனால் என்ன பயன். இறந்தவன் பிறக்க வேண்டியவனே.

நாம் பிறந்திறவாத் தெய்வமாய்—நித்திய சீவனாய்—சிரஞ்சீவியாய் வாழ முடியுமென்று எம் முன்னோடிகளாயிருந்த மகான்கள் கூறியுள்ளார்கள். எவ்வாறெனில் சோதி சொரூபனாஞ் சிவனை — ஞானநிலையை — ஏகோவாவை — அல்லாவை

முறையே புகழ்ந்தேத்திய சமய குரவர்களை—புத்தபகவானை—ஜீவரெட்சகராம் ஏசுநாதரை—திருத்தூதனாக வந்த நபிகள் நாயகத்தை அவரவர் வகுத்த வழிபாட்டு முறைகளை கொள்கைகளுக்கும், நெறிகளுக்கும் அமைய வழிபட்டுத் தொழுது வருவதாகும்.

இஃதை அண்ணாமலையி லெழுந்தருளியிருந்த குகை நமச்சிவாய சுவாமிகள்:—

'பிறந்திருக்குந் தெய்வப் பிணங்களைக் கொண்டாடே
னிறந்தழைக்குஞ் சோணகிரி யாரே—பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே வுமக்கடிமையான பேர்
தம்மைப் புகழ்வ தல்லாற்றன். என்றும்,

மாணிக்கவாசக சுவாமிகள்

"ஞான வாளேந்தும் ஐயர் நாதப் பறையறைமின்
மானமாம் ஏறுமையர் மதி வெண் குடை கவிமின்
ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே".

என்றும்

அருணகிரிநாதர்

வேதம் வேண்டாம் சகல வித்தை வேண்டாம் கீத
நாதம் வேண்டாம் ஞான நூல் வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் தாள் போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம். என்றும் பாடியுள்ளார்கள்.

அத்தகைய தெய்வம் புகழ்ந்தேத்தும் தத்துவ புருஷனை எங்குளானென்று நீங்கள் ஒருவருந் தேடியலையத் தேவையில்லை. அவர் பக்க நின்றார், அறியாப் பரமனாய், மானிட யாக்கை தாங்கி "எங்கு நீ அங்கு நான்" என்று எமதகங்குடி கொண்டு எங்கும் வியாபகமாயுள்ளார். அவரே அருளொளி அண்ணலாம் அருட்திரு சித்திரமுத்தடிகள். பண்டு "ஓ நமச்சிவாயன்" புகழ்ந்தேத்திய அருணகிரியானே அழகன் குழத்தானென்று நம்புங்கள், அவனைச் சதா புகழ்ந்தேத்துங்கள். அடியேனைப் போல நலம் பெறலாம்.

செப்பரிய ஆணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினேன்—இப்போ
தருவாகநின்ற அருணகிரியானைக்
குருவாக என்னுளத்தே கொண்டு

சுபம்



# தேர் வெண்பா

அருட்கவி சி. விநாசித்தம்பி புலவர்

உ

ப ங் கு

ம் ஞா கா டு கி

த வு வே ா ர வ ரு க்

கு ங் வி பா ப் ன ஞா ம் மு

டா ண் ட வ ன் பா ல் ச ந் த த

ன் சு ஞ் ன தா த் ச ஞ் றை

ந் து ச ர ண த் தி

வ து த் ய் ரெ

ற தே வ

ன்

வா னி

வானின்ற தேவரெய்த்து வந்துசர ணத்திறைஞ்சத்
தானஞ்சுண் டாண்டவன்பாற் சந்ததமும்-ஞானப்பா
லிங்குதவு வசரவருக் கீடுகா ணற்பங்கு
சிங்காரப் பாதாரத் தேன்.

## பொழிப்புரை

அஞ்சிவந்து சரண்புகுந்த தேவர்பொருட்டு, நஞ்சையுண்டு, வந்தடைந்த தேவரைக்காத்தவனாகிய இறைவனை, ஞானம் என்ற பாலால் அபிடேகம் செய்வோருக்கு, அவரது திருவடியிற் சுரக்கும், ஆனந்தத் தேனில் மிகுந்த பங்குண்டு.

## பெற்ற தாய்

காற்று வீசும்போது விசிறி வேண்டியதில்லை. காற்று வீசாதிருந்தால் விசிறிக் கொள்ள வேண்டும். ஆண்டவன் அருள் உண்டானால் நம்முடைய முயற்சிகளையெல்லாம் நிறுத்திவிடலாம் அப்போது பிரார்த்தனையும் வேண்டாம், ஜபமும் வேண்டாம். தியானமும் தபமும் வேண்டாம்; அவன் அருள் ஒன்றே போதும். காற்று வீசாத வரையில் விசிறியை எடுத்து விசிறிக்கொள்ள வேண்டியது அவசியம்.

'நான்' 'எனது' என்று எண்ணும் வரையில் அவன் அருள் வீசுவதற்குத் தடை. உன்னை நீ மதிக்கும் வரையில் அவன் தூரவே நிற்பான். ஆண்டவன் ஒருவனே எல்லாம் நடத்துகிறான் என்று மனத்தினின்று ஆணவத்தை முற்றிலும் அப்புறப்படுத்தினால் அவன் அருளுக்கு ஓடத்தின் பாயை விரித்த மாதிரியாகும். ஆணவம் நிறைந்து கிடந்தால் அருள் காற்றுக்கு இடமில்லை.

குழந்தையின் சுபாவம், தன் மேல் மண்ணும் குப்பையும் பூசிக் கொள்ளும். தாயின் மகிழ்ச்சி அந்த அழுக்கைத் தேய்த்து அலம்பி நன்றாகச் சுத்தப்படுத்தித் தன் குழந்தையின் அழகு முகத்தைப் பார்த்துக் களிப்படைவது. இவ்வாறே மக்கள் தவறு செய்வது அவர்களுடைய சுபாவமானாலும், ஈசுவரி அந்த அழுக்கைத் துடைப்பாள். நாம் அவளுடைய அருமைக் குழந்தைகள். பயப்பட வேண்டாம். தாயைத் தாயென்று உணர்ந்து அன்பு செய்யுங்கள். பாவங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போகும்.

— பகவான் ராமகிருஷ்ணர்



# விழிப்பு

—காசி ஆனந்தன்.

விழித்திருப்பவன் களித்திருப்பவன்!
புழுத்த உலகினைப் புரிந்து கொள்பவன்!
விழித்திருப்பவன் களித்திருப்பவன்!
உழுத்த மாயையை உணர்ந்து கொல்பவன்!
விழித்திருப்பவன் களித்திருப்பவன்!
கொழுத்த திருவருள் கொண்டு வாழ்பவன்!
விழித்திருப்பவன் களித்திருப்பவன்!
பழுத்த தேவனின் பாதம் சேர்பவன்!

ஒரு மனிதனின் வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனென்றோ உறுதி செய்துவிடாதே உள்ளத்தின் பண்பைக்கொண்டு முடிவுசெய். பலாப்பழம் முள்ளு முள்ளாக மேலே தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணை கோணல் ஆனால் இனிய நாதமுண்டு-எட்டிப்பழம் மேலே பளபளவென்றிருக்கும்; தொட்டாலே கசக்கும் நாவற்பழம் கருமை; ஆனால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபளவென்றிருக்கும்; ஆனால் கொடிய விஷத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும்; உயிரை வாங்கும்.

திருமுருக கிருபானந்தவாரி.

# சிவராத்திரி

செ. சிறீக்கந்தராசா, B. Sc.,
வழக்குரைஞர்

1 இன்றைக்குச் சிவனிரவு; எல்லோரும் விழிக்கின்றார்
அன்றைக்கும் அப்படித்தான் அநேகர் விழித்தார்கள்
என்றைக்கும் இந்தநிலை இருந்துவரும் ஐயமில்லை
கொன்றையணி ஈசனிடம் கொண்டிருக்கும் அன்பேகால்

2, நன்றன்றிச் செயலென்று நானொருகாலுங் கூறேன்
என்றாலும் ஒன்றையிங்கே உரைக்கக் கடன்பட்டேன்
பன்னுகிறேன் என்கருத்தைப் பழியென்மேற் போட்டீரே
உன்னுகிற சிவனிரவின் உறுபயனை இழந்திடுவீர்.

3 கொன்னேதான் சிவனிரவைக் கொண்டாடி னுமக்கு
விண்ணேறும் பாக்கியங்கள் விரைவாக வருமென்பனில்
அன்னேரம் வாழ்பழக்க எல்லுயிரும் வான்போகும்
என்னேதான் உம்வாதம் ஏனோதான் உந்தமதி?

4 சிவனிரவு விழிப்பதற்குச் சினிமாவில் நிற்கின்றீர்
சிவன்வரத்தைப் பெறுவதற்குச் சீட்டாட்டம் போடுகிறீர்
சிவனாமம் தனைச்சொல்லி சிந்தையிலே அதையிருத்தி
பாவம்போக்க வழிகாணில் பயனிருக்கும் சிவனிரவில்!

5 தவமென்றால் என்னவெனச் சொல்லுகிறார் வள்ளுவனு
எவன்றனக்கு வருகின்ற இன்னல்களை வரவேற்று
சிவமாகும் உயிர்கட்குத் தீங்கிழைக்கா திருப்பவனோ
அவனேதான் தவமுடையான் என்கின்றார் மறைமொழியா

6 சிவலோகம் தவலோகம் சிந்தையிலே எழவேண்டாம்
எவரோடும் மோதாமல் எல்லார்க்கும் இதஞ்செய்து
சுவமாக வாழ்வமெனச் சொல்லிடுக சிவனிரவில்
அவனுக்கும் இதுவேதான் அகத்தினிலே விருப்பென்க.



# திருவருள்

## சிவராத்திரி சிறப்பிதழ்

### நன்றி நவிலல்

திருவருளின் மகிமையால் சமய ஆர்வமுள்ள இளைஞர்களைக் கொண்டியங்கும் திருவருள் அரங்கத்தினர் இறைவனை இறைஞ்சுகின்ற சிவராத்திரி நன்னாளில், எண்ணங் களை எழுத்தோவியமாக்கி, எத்திக்குமுள்ள சிவனருட் செல்வர்களுக்கு திருவருளமுதாய் தர திருவருள் பாலித்தது.

திருவருளை சிறப்பாக வெளியிடுவதற்கு உதவி யாக இருந்து ஆக்க வேலைகள் அனைத்தையும் அல்லும் பகலும் ஊக்கம் துக்கம் அத்தனையையும் துறந்து அயராது உழைத்த விளம்பரம் கருதா சைவ செம்மல் மூவருக்கு அரங்கம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

திருவருளை சிறப்பிக்க கட்டுரை, கவிதை தந்துதவிய சைவப்பெருந்தகைகளுக்கும், பெரியோர்களுக்கும்- பிரசுரகர் உயர்திரு, கி. பி. ஹரன், உயர்திரு, சி. வேலாயுதம் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம் மேலும் ஆசிச்செய்தி தந்து திருவருளை சிவமணங்கமழச்

செய்த, சுவாமி ஸ்ரீரங்கானந்தா அவர்களும், அருட்கவி, சீ. விநாசித்தம்பி அவர்களுக்கும் எமது இதயப்பூர்வமான நன்றியை பன்முறை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆக்கமும், ஊக்கமும் அளித்து, நன்கொடை தந்துதவிய சைவப் பெருந்தகைகளுக்கும், நன்கொடையை சேர்த்து தந்துதவிய விளம்பரம் விரும்பா திருவருள் அரங்க அங்கத்தினர்களுக்கும், அன்பர்களுக்கும் தொண்டர்களுக்கும், பெருந்தகைகளுக்கும் அரங்கம் கடமைப்பட்டுள்ளது.

எங்களின் எண்ணப்படி காலத்தையும் பொருட் செலவையும் கருதாது குறைந்த பொருட் செலவில் நிறைந்த கவர்ச்சியுடனும், அம்சங்களுடனும் பதிப்பித்து புத்தக வடிவமைத்து சிவனருட் செல்வர்களுக்கு திருவருள் அமுதமாய் உதவிய ஆட்டோ பிரிண்டர் ஸ்தாபனத்தார்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

சிவராத்திரி சிறப்பிதழான திருவருள் நன்கு மலர உதவிய சைவப் பெருந்தகைகள், பெரியோர்கள், அன்பர்கள் அனைவரும், ஆக்கவேலைகள் பொதுநல அன்பர்கள் அனைவரும் சகல சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

— ஆசிரியர் —



# திருவருள்

## ( சிவராத்திரி சிறப்பிதழ் 1971 )

திருவருள் அரங்க இலவச வெளியீடு

---

நாத விந்து கலாதி நமோநம

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக–

துக்கங்களுக்கெல்லாம் காரணம் பிறவிதானே. இனி பிறக்காவிட்டால் கவலையே இல்லை. பணம் வேண்டுமென்றால் பணக்காரனிடம் போவதுபோல் பிறப்பு வேண்டாமென்றால் பிறப்பில்லாதவனிடம் தான் போக வேண்டும். பிறப்பு வேண்டாம் என்பது போல் இறப்பும் கூடாது. இறந்தால் மறுபடியும் பிறவி எடுக்கத்தான் வேண்டும். இறவாமல் அமிருதமாகிவிட வேண்டும் அப்போது பிறப்புக் கிடையாது. பிறப்புக்குக் காரணம் காமன். இறப்புக்குக் காரணம் காலன். காமனையும் காலனையும் வென்றோமானால் அப்புறம் உற்பத்தியும் இல்லை, அழிவும் இல்லை அதற்காகத்தான் காமனைக் கண்ணால் எரித்தவரும், காலனைக் காலால் உதைத்தவருமான ஈசுவரனை சரணம் அடைய வேண்டும்.

திருவருள் அரங்கம்
7—1/14, உம்பிச்சி பிளேஸ்,
ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு-13.

Auto Print, Colombo-12.

## சமயச் சடங்குகள்

"நெல்லில் முக்கியமான பொருள் அகனுள் இருக்கும் அரிசியே. அரிசியை மூடிக் கொண்டிருக்கும் உமியைக் குத்தி எடுத்துவிட்டுத்தான் அரிசியை உணவாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் மகனே! அரிசி நாள்பட நிற்காது; கெட்டுப் போகும். நெல்லாக வைத்தால்கெடாமல் நிற்கும். அரிசியை வயலில் விதைத்தால் பயிருண்டாகாது. நெல்லை விதைத்தால்தான் முளைக்கும் அரிசிதான் முளைப்பதாயினும் அது உமியால் மூடப்பட்டு நெல்லாக நிலத்தில் பதிந்தால்தான் முளைவிட்டு வளரும். நம்முடைய தர்மத்துக்குக் காப்பாகவும், உயிர் கொண்டு வேர் ஊன்றி வளர்ந்து பயிர் கொடுப்பதற்காகவுமே கிரியைகளும் முறைகளும் சடங்குகளும், திருவிழாக்களும் நெல்லின் உமிபோல் அமைக்கப்பட்டன. சமைத்து உண்பதற்கு உமி வேண்டியதில்லை அரிசிதான் வேண்டும். ஞானம் அடைந்தவனுக்குக் கிரியைகளும், திருவிழாக்களும் கோயில்களும் வேண்டியதில்லை. ஆனால் இவையெல்லாம் இல்லாமல் ஞானம் மட்டும் தனித்து உபதேசிக்கப்பட்டு ஹிந்து தர்ம முறையாக வைக்கப்பட்டிருந்தால் அது வயலில் போட்ட அரிசியைப் போல் முளை விடாமல் அழிந்து போயிருக்கும்" என்றார் பகவான் ராமகிருஷ்ணர்.

உடலில் ஒரு காயம் ஏற்பட்டால் அது ஆறும் வரையில் அதற்குக் காப்பாக மேலே பொருக்குத் தோன்றுகிறது. உள்ளே காயம் இருக்கும் வரையில் பொருக்கு இருக்க வேண்டும் புண் ஆறுவதற்கு முன் பொருக்கை எடுக்கக் கூடாது. புண் ஆறியபின் தானாகவே அது உலர்ந்து வேறுபட்டுவிடும். ஞானம் அடைந்தபின் சடங்குகளும் ஆசாரங்களும் தாமாகவே கழிந்து ஒழிந்து போம். ஞானம் அடைவதற்கு முன் அவற்றை ஒழிக்கப் பார்ப்பது புண் ஆறுவதற்கு முன் மேற் பொருக்கை எடுத்துப் புண் ஆறுவதைத் தடுப்பது போலாகும்.

ஆசார விதிகளை மதிக்க வேண்டியதில்லை என்று ஞானம் பெற்ற சிலர் எண்ணலாம். ஞானம் உண்மையில் முற்றுவதற்கு முன் ஆசார வழக்கங்களை விட்டுவிடப் பார்ப்பது உசிதமல்ல புகை போட்டுப் பழுக்க வைத்த பழம் நல்ல இனிப்பாக இராது. நன்றாக முற்றி இயற்கையில் பழுத்த பழமே சரியான சுவை பெறும்.

—ராஜாஜி.